மலர் 1 | 20-1-63 | இதழ் 13

என்னதான் நடக்கும் நடக்கட்டுமே...

இந்தியத் துணைக்கண்டத்திலிருந்து ஒரு பகுதி விடுதலை பெற விரும்பினால்; அந்த விருப்பத்திற்குப் பெரும்பான்மையான மக்கள் ஆதரவு இருந்தால், அந்தப் பெரும்பான்மையான மக்களின் விடுதலை வேட்கையை நிறைவேற்றி வைக்க இந்திய அரசியல் சட்டத்தில் இடமிருக்கிறது.

பர்மா தனி நாடாகியது, பாகிஸ்தான் பிரிந்துபோனது, பெருபாரி மாநிலத்தைத் தத்தம் செய்தது, பொட்டி ஸ்ரீராமுலுவால் ஆந்திரம் வெட்டிக்கொண்டது, பெருங் கலவரத்திற்குப் பின் பம்பாய் இரு கூருகப் பிரிந்தது, அஸ்ஸாம் மக்களின் ஆசை 'பாதி' கனிந்தது எல்லாம் இந்தச் சட்டத்தின் துணை கொண்டுதான்.

விரும்பினால் வெட்டிக் கொள்வதற்கு - விடுதலை பெறுவதற்கு இந்திய அரசியல் சட்டம் இடம் தருகிறது.

சர்வாதிகார நாடு என்று வர்ணிக்கப்படுகிற ரஷ்யாவில் கூட, விரும்பினால் பிரிந்து போகிற உரிமை வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

என்னதான் சட்டமிருந்தாலும், இரத்தப் புரட்சி ஏற்படாமல் உரிமை வாழ்வு கிடைத்ததாக வரலாறும் சொல்லவில்லை. நமது தலைமுறையிலும் நாம் காண முடியவில்லை.

எந்த ஒரு பகுதியினருக்கும் பரிபூரண விடுதலை கொடுப்பதன் மூலம், மொத்த நிலப் பரப்பில் ஒரு பகுதியை; மக்கள் தொகையில் கணிசமான ஓர் அளவை இழந்துவிட ஆளும் அரசினர்க்கு மனம் வருவதில்லை.

காரணம்? நிலப்பரப்பின் அளவை வைத்து, மக்கள் தொகையின் பெருக்கத்தைப் பார்த்து உலக அரங்கில் எந்த நாடும் மதிக்கப் பெற்று வருவதாக ஒரு எண்ணம் பரவலாக இருந்து வருகிறது.

அதனால்தான் மதுரையில் கூடிய காங்கிரஸ் கட்சி மாநாட்டில் பண்டித நேரு பேசியபொழுது நடந்து முடிந்த பிரிவினையெல்லாம் போதும், **'இனி ஒரு பிரிவினைக்கு** நான் சம்மதிக்க மாட்டேன்'என்று, **'இனி'** என்ற வார்த்தையை அழுத்தமாகச் சொன்னார்.

பிரிவினைக்குச் சம்மதிக்கமாட்டேன் என்று பிடிவாதம் செய்வதும், அதிகாரத்தின் உச்சியில் அமர்ந்துகொண்டு அனல் வீசப் பேசுவதும், அடக்கி ஒடுக்குவேன் என்று ஆர்ப்பரிப்பதும், அதன் விளைவுகள் விபரீதமாகி, உரிமைக் குரல் ஓங்கி ஒலிக்கத் தொடங்கியவுடன் - அந்தப் புரட்சியின் உருவம் உலகத்தின் மூலைக்கெல்லாம் தெரிந்துவிடும் என்ற நிலைமை ஏற்பட்டவுடன் - பிடிவாதத்தின் உச்சியிலிருந்து இறங்கி வருவதும் - பின் இசைவு தருவதும்; இந்தியத் துணைக்கண்ட வரலாறு சுமந்துகொண்டு நிற்கும் பரிதாப நிகழ்ச்சியாகும்.

என்னதான் ஜனநாயகம் கொடிகட்டிப் பறந்தாலும் - எங்கள் நாடு; தனி உரிமை வாழ்வு; விடுதலை உணர்ச்சி - என்ற உச்சக்கட்டம் வருகிறபொழுது, சாம்ராஜ்யங்களைக் கட்டியாண்ட மன்னாதி மன்னர்களின் மனோபாவம் இவர்கள் இதயத்திலும் அழுத்தமாக ஊறிப்போயிருக்கிற நிலைமை அப்பட்டமாகத் தெரிகிறது.

சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு - சிற்றரசர்களின் உரிமையைப் பறித்துக்கொள்வதும், அவர்களை அடிமையாக்கி விடுவதும், அவர்கள் ஆண்ட நிலங்களைப் பிடுங்கிக்கொள்வதும்

(10-ம் பக்கம் பார்க்க)



ஜீவானந்தம் மறைவு

ஜீவானந்தம் இயற்கை எய்தினார் என்ற செய்தி கேள்விப்பட்டதும் இதயத் துடிப்பு ஒரு வினாடி நின்று தொடங்கியது.

நம்பவே முடியவில்லை நெஞ்சை வேக வைக்கும் அந்தச் செய்தியை. தங்கநிகர் தலைவர்களை வெடுக்கென்று பறித்துச் செல்வதில் இயற்கைக்குத் தாளாத ஆசை.

உயிரைப் பறித்துக்கொண்டு போய்விட்டாலும், நம் கண்களுக்குள் சிங்கம் போல் நிற்கின்றது **ஜீவானந்தம் அவர்களின் உருவம்.**

"அதோ, கையில் தோல் பையை அணைத்தபடி நடந்தே அலுவலகத்திற்குச் செல்கிறார். பஸ் ஸ்டாண்டில் காத்துக்கொண்டு நிற்கிறார். பஸ்ஸில் நின்று கொண்டே பிரயாணம் செய்கிறார்." - தமிழ்நாடு கம்யூனிஸ்ட் கட்சியின் **பெருந்தலைவர் ஜீவானந்தம்** மக்கள் மனதில் இவ்வளவு எளிமையாகப் பதிவாகியிருந்தார்.

மேடையில் கையை உயர்த்தி உயர்த்திப் பேசும் அந்த அழகும்; முதலாளித்துவத்தின் கொடுமையை சிங்கம்போல் கர்ஜிக்கும் அந்தக் கம்பீரமும்; தொழிலாளி வர்க்கத்திற்காக உடல் தளர உழைத்த உழைப்பும் இனி யார் மூலம் தமிழகத்திற்குக் கிடைக்கப் போகிறது.

இளமைப் பருவம் முதல்; நேற்று இளங்காலை நீடு துயில் கொள்ளும் வரை - நாடு, சமுதாய சீர்திருத்தம், பொதுத்தொண்டு, அரசியல் விழிப்புணர்ச்சி இதற்கல்லவா உயிரும் உணர்ச்சியும் பாடுபட்டு வந்தது.

மூச்சடங்கும் வரை பொது நலப் பேச்சடங்கவில்லையே?

இனி எந்த நாளிலும் பெற முடியாத பெருந் தலைவனை தமிழ்நாடு கம்யூனிஸ்ட்கட்சி இழந்துவிட்டது!

தங்களுக்காக உடல் தளர உழைத்து வந்த உற்ற நண்பனை தொழிலாளர்கள் இழந்துவிட்டனர்!

கொடுமையைச் சாடிடும் கம்பீர முழக்கத்தை மேடை இழந்துவிட்டது!

இலக்கியத்தில் சாறெடுக்கும் கொஞ்சு தமிழ்ப் பாவலனை-வாழும் இலக்கியங்கள் வாரிக் கொடுத்துவிட்டன!

சலியாத உழைப்பின் உருவை, எளிமையாக வாழ்ந்து காட்டிய பொதுவுடமைப் பெரியவரை நாடும், நாமும் இழந்துவிட்டோம்.

அன்னாரை இழந்த துடிப்பால் ஆறாத் துயரில் மூழ்கியிருக்கும் அவர் தம் குடும்பத்தாருக்கும் உறவினர்களுக்கும் நம் கண்ணீரைக் காணிக்கையாக்குகிறோம். நமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

ஜீவாவின் ஆவி பிறிந்ததே தவிர, அவர் ஆற்றிய செயல், உழைப்பு, தியாகம் யாவும் - வையகம் உள்ள வரை - வரலாறு உள்ளவரை வாழும்! வாழவேண்டும்.

(1-ம் பக்கத் தொடச்சி)

"வீரணை இப்போது, நீ கொலை செய்யப் போகவில்லை. ஒரு சபதத்தை நிறைவேற்றப் போகிறாய். ஒரு யுவதி, வாழாமல் சாகப் போவதைத் தடுத்து அவளை வாழச் செய்யும் புனிதப் பணிக்குப் போகிறாய், ஒரு தாயுள்ளம் நிராசையுடன் மூழ்கிப் போகாமல் தூக்கி நிறுத்துவதற்காகப் போகிறாய். எனக்கு நம்பிக்கை தெரிவித்து விட்டுப் போ! வீரணை, துப்பாக்கியை நழுவ விட்டுவிடாதே! போன வருஷம்தான் மானகிரி இந்தத் துப்பாக்கியைக் கொண்டு வந்து கொடுத்தான். பத்திரமாக வைத்திருக்கச் சொன்னான். தொண்டி ராவுத்தருடையது என்று அவன் சொன்னதாக எனக்கு நினைவு!—என்று உணர்ச்சியூரப் பேசினாள் சிலம்பாயி.

வீரணன் கண்கள் கலங்கின. அவனுக்கு உணர்ச்சி கொப்பளித்தது. குமுறினான். "குலதெய்வத்தின் மீது ஆணை. மானகிரி மறவனின் வீரத்தின் மீது ஆணை. எனது தூய உள்ளத்திற்கு இது ஒரு சவால்! உங்களின் வீர சபதம் எனக்கு துணை நிற்கட்டும்!

விரைவில் வெற்றியுடன்வந்து மானகிரியைப் பெற்ற புலிக்குகை போன்ற உங்கள் வயிற்றில் தேன் பாய்ச்சுகிறேன்"— என்று வாக்குறுதியளித்தான் வீரணன்.

பொழுது சாய்ந்தது. சிவலிங்கத்தை மீண்டும் இருந்த இடத்தில் வைத்துவிட்டு வருவதற்குள் இருட்டிவிட்டது.

துவரிமான் துப்பாக்கி

மானாமதுரையில் இன்ஸ்பெக்டர் தங்கப்பாண்டியன் குடியிருந்த வீடு ஆற்றோரத்தில் இருந்தது. மாளிகை போன்ற பெரிய வீடு அது

வீரணன் அங்கு சென்று இடம் கண்டு, திட்டம் போடுவதற்கே இரண்டு நாட்களாகி விட்டன. தங்கப்பாண்டியனைச் சுட்டுக் கொன்று அவனது உத்தியோக உடைகளை சிலம்பாயியின் காலடியில் சமர்ப்பிப்பது என்பது வீரணன் போட்ட திட்டம்.

தங்கப்பாண்டியனுக்கு மானாமதுரைப் பிராந்தியத்தில் நல்ல புகழ் இருந்தது. போக்கிரிகள் பயந்து நடுங்கினார்கள். வழிப்பறியும் கலவரங்களும் சேர்ந்திருந்தன.

தங்கப்பாண்டியன் வழக்கமாக இரவு பத்து மணிக்கு மேல்தான் வீடு திரும்புவார் என்பதை அறிந்திருந்தான் வீரணன். தங்கப்பாண்டியன் வீட்டுக் கொல்லையிலிருந்த தென்னமரத்தில் ஏறி உட்கார்ந்து கொண்டான். தலையில் கருப்புத் துணியால் தலைப்பாகை கட்டியிருந்தான். பார்ப்பவர்கள் அடையாளம் கண்டு கொள்ள முடியாதபடி ஒட்டு மீசை வைத்திருந்தான்.

தங்கப்பாண்டியன் களைத்துப்போய் வீட்டுக்கு வந்தார். அப்போது மணி பதினொன்று. இன்ஸ்பெக்டரோடு இன்னொருவரின் பேச்சுக் குரல் கேட்டது. வீரணன் உற்றுக் கேட்டுத் திகிலடைந்தான். அது சிங்காரராயனின் குரல். சிங்காரயனை ஏற்கனவே வீரணன் அறிவான். இருவருக்கும் நல்ல பழக்கம் உண்டு. இன்ஸ்பெக்டரும் சிங்கராயனும் வெகுநேரம்வரை பேசிக் கொண்டிருந்தார்கள். இரவு ஒரு மணிக்கு மேல் சிங்கராயன் விடை பெற்றுக் கொண்டு போனான்.

தங்கப்பாண்டியன் இடுப்பில் இருந்த கைத்துப்பாக்கியை எடுத்து மேஜைக்குள் வைத்தார். விளக்குகள் அணைந்தன. எங்கும் ஒரே அமைதி. வீரணன் மரத்திலிருந்து இறங்கி படுக்கையறையை நெருங்கிவிட்டான். தங்கப்பாண்டியன் புரண்டு படுத்தார். வீரணன் கதவருகே போகும்போது படுக்கையறைக்குள் பேச்சுக்குரல் கேட்டது!

"நல்ல நேரத்தில் கவனப்படுத்தினீர்கள் சிங்கராயரே! எனது பதவி உயர்வுக்கு எவ்வளவு காரணமாக இருந்தீர்களோ, அதைப்போல் என் உயிரைக் காப்பாற்றுவதற்கு பெருந்துணையாக வந்திருக்கிறீர்கள். என்னைக் கொன்றவளுக்கு, மானகிரியின் தாயார் அவள் மகளைக் கட்டிக் கொடுக்கப் போகிறாளாக்கும்!...நான் ஒரு மத யானை! குறி வைத்தால் எதிரி சாகும்வரை விடமாட்டேன். பேதைச் சிறுக்கி அவளுக்கென்ன தெரியும்!"— தங்கப்பாண்டியன் தூக்கக் கலக்கத்தில் புலம்பியதை வீரணன் கவனிக்காமலில்லை. மானகிரியின் சாவுக்கும் சிங்கராயனுக்கும் ஏதோ தொடர்பிருக்கிறது என்பது மட்டும் வீரணனுக்குப் புரிந்தது.

குற்றவாளிகள் அகப்பட்டு விட்டபிறகு ஊமைகளாகவும், ஒன்றும் தெரியாதவர்கள் போலவும்அடங்கிவிடுகிறார்கள். அவர்கள் வெளியில் இருக்கும் போது அவர்களது புத்திவெகு நூதனமாக வேலை செய்கிறது. இல்லாவிட்டால் தூங்கும் இன்ஸ்பெக்டரைச் சுட்டு வீழ்த்துவதற்கு மூன்று மணி நேரம் பிடித்திருக்குமா? காலை மூன்று மணிக்குமேல்தான் வீரணன் இன்ஸ்பெக்டர் தங்கப்பாண்டியனைச் சுட்டான். அதுவரை வீரணன் புத்தி, பல புதிய காரணங்களைக் கற்பித்துக்கொண்டிருந்தது.

காலையில் நகர் முழுவதும் செய்தி பரவியது. போலீஸ் மேலதிகாரிகள் வந்து விழுந்தார்கள். மானாமதுரை முழுவதும் போலீஸ் மயமாகவே இருந்தது.

போலீஸ் தலைமை அதிகாரி மதுரையிலிருந்து வந்து ஷூட்டிங் நடைபெற்ற இடத்தைப் பார்வையிட்டார். தங்கப்பாண்டியனின் பிணத்திற்கு அருகில் ஒரு கைத் துப்பாக்கி கிடந்தது. அது புதிய துப்பாக்கி! வீரணன் விட்டதுதான்! அந்தத் துப்பாக்கியில் அரசாங்க முத்திரை பதித்திருந்தது. போலீஸ் அதிகாரி, அந்தத் துப்பாக்கி அரசாங்கத்தின் அனுமதி பெற்று வாங்கப்பட்டது என்று தீர்மானித்தார்; ஆனால் அது யாருடைய துப்பாக்கி என்று உடன் அறிய அவரால் இயலவில்லை.

ஒருவாரத்திற்குப் பிறகு சென்னையிலிருந்து வெளியாகும் ஒரு தினசரிப் பத்திரிகையில் தங்கப்பாண்டியன் கொலையைப் பற்றி ஒரு திடுக்கிடும் தகவல் வெளியாயிற்று.

"இன்ஸ்பெக்டர் தங்கப்பாண்டியன் கொலை சம்பந்தமாக தொண்டி துவரிமான் ராவுத்தர் கைது செய்யப்பட்டிருக்கிறார். தங்கப்பாண்டியன் வீட்டில் போலீசார் கண்டு பிடித்த துப்பாக்கி துவரிமான் ராவுத்தருடையது என்று சொல்லப்படுகிறது. தற்போது துவரிமான் ராவுத்தர் மதுரைச் சிறையில் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருக்கிறார். அவரைச் சந்திக்க எவரும் அனுமதிக்கப் படுவதில்லை".

—இந்தச் செய்தி அந்த வட்டாரத்தையே அதிரச் செய்தது. துவரிமான் ராவுத்தரின் குண தோஷங்கள் கடைவீதிகளில், தண்ணீர்த் தொட்டிகளில், தேனீர்க் கடைகளில் விமர்சிக்கப்பட்டன.

(வளரும்)

உங்களுக்குத் தெரியுமா?

பொதுமக்கள் பேசிக்கொள்வது உண்மைதானா?

சில நாட்களுக்கு முன்பு காட்டிக் கொடுத்தவர்கள் என்ற பட்டயத்தைக் குத்தி அரசாங்கம் காவலில் வைத்த தல்லவா சில கம்யூனிஸ்டுகளை - அந்த வெண்ணை வெட்டி வீரர்களில் சிலர் இரண்டொரு நாட்களுக்கு முன்பு விடுதலை செய்யப்பட்டார்கள்.

எப்படித் தெரியுமா?

காம்ரேட் மோகன் குமாரமங்கலம் தலைமையில் ஒரு தூதுகோஷ்டி, தமிழ் மாநில அமைச்சர்களில் ஒருவரைச் சந்தித்து தன் சகாக்கள் செய்த துரோகச் செயலுக்கு வருத்தம் தெரிவித்து அவர்களை விடுதலை செய்யும்படி **பொது மன்னிப்புக் கேட்டார்களாம்.** பொது மக்கள் இப்படி பேசிக் கொள்கிறார்கள்.

மறைவிடத்தில் கால்பிடித்து மன்னிப்புக் கேட்கும் பாரம்பரியமே! **பொது மன்னிப்புக் கேட்பது** உங்களுக்கு வாடிக்கைதான் என்றாலும் இன்று அந்த ரகசியமும் முச்சந்தி வரை வந்துவிட்டது.

இப்படியும் உயிர் வாழத்தான் வேண்டுமா?

அட ஜடங்களே!

பிப்ரவரி 1-ந் தேதி வெளிவருகிறது!

அண்ணாவின் அணிவகுப்பில் ஆற்றல் மிகுந்த படைக்கலன்

"தென்னகம்"

(வார ஏடு)

ஆசிரியர்: கே. ஏ. மதியழகன்

விவரங்களுக்கு

தென்னகம்: சென்னை-6

காந்தியத்தின் வெற்றி

பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரை

பண்டையோர் மனித இனப் பண்பாட்டில் மூன்று தள மட்டங்கள் கண்டிருந்தனர். கடைத்தளம் அல்லது தமோ குணம் தாக்காதவரைத் தாக்குவது, தாக்கியவரைத் தாக்காமல் அடிபணிவது. இடைத் தளம் இரசோ குணம், அது தாக்கியவரை மட்டும் தாக்குவது. தாக்காதவரிடம் அளவளாவுவது. தலைத்தளம் சத்துவகுணம். தாக்கியவருக்கும் நலம் செய்வது; தாக்காதவர்க்கும் நலம் செய்வது, ஆனால் அவர் பண்பு எதிர்ப்பது.

புத்தர், மகாவீரர், இயேசு பிரான், முகமது நபிகள்நாயகம், காந்தியடிகள் ஆகிய அறவோர் தலைத்தளமாகிய சத்துவ குணச் செல்வர்கள். இவர்களுள் காந்தியடிகள் நம் காலத்தில் வாழ்ந்தவர். சாத்துவீக முறை அல்லது அகிம்சை அறத்துறையிலேயே, சமுதாய வாழ்வில் கூடச் சமயத்துறைக்கே உரியதாகப் பொதுவாக உலகில் கொள்ளப்பட்டு வந்துள்ளது. ஆனால் காந்தியடிகள் தான் உலகிலே முதன் முறையாக, இதை எல்லாத்துறைகளிலும், அரசியலிலும் பின்பற்றத் துணிவுடன் முன் வந்தார். இதனால்தான் அவரே அதனை ஒரு தேர்வு முறை (experiment) என்று கூறினார். இந்தியாவின் விடுதலைப் போரிலே இந்த முறை பெருவெற்றி கண்டதென்பதில் ஐயமில்லை. உலகப் பெரியார்கள் முன் காலங்களில் மட்டுமல்ல, இன்றுகூடக் கீழ்த் திசையில் தான் பிறக்கின்றனர் என்பதை மேலை உலகம் உணர்ந்து ஏற்றுக் கொண்டுள்ளது.

தற்கால வாழ்வில் எதற்கும் கீழ்திசையை மதிக்காத மேலையுலகு இந்தக் காந்தியம் ஒன்றைக் கீழ்திசை தந்த உலகச் செல்வம் என்று மதிக்கிறது.

காந்தியடிகள் காலத்தில் தான் இதே இந்தியாவிலுள்ள ஒரு தற்காலக் கவிஞனை- தாகூரை- உலகக் கவிஞனாக மேலையுலகம் ஏற்றுக்கொண்டது.

காந்தியடிகள் காலத்தில் தான் கீழ்த்திசையின் ஒரே இலக்கிய ஏட்டை-திருக்குறளை மேலையுலகம் உலக ஏடாக ஏற்றுக்கொண்டது.

தற்கால உலகில் மேல்திசை மதிக்கும்படியான பண்புகள் இந்த மூன்றும்தான் - மூன்றும் இந்திய மாநிலம் அளித்த பண்புகளே என்று பெருமையுடன் கூறலாம்.

காந்தியம்- காந்தியடிகளின் பண்பு- இந்தியாவில் குஜராத் ஈன்ற செல்வம்.

தாகூரின் கவிதை - தாகூர்- இந்தியாவில் வங்கம் வழங்கிய தங்கம்.

திருக்குறள் - திருவள்ளுவர்- இந்தியாவில் தமிழகம் வழங்கிய அமிர்தம்.

மூன்றில் ஒன்றளித்த தமிழகம் மூன்றையுமே ஒருங்கே அளிக்க முன் வந்துள்ளது.

காந்தியமரபின் ஒரு தமிழக மலர்ச்சிக் கொழுந்தான தென்னகக் காந்தி, 'தாகூரின் கலைமரபில் வந்த ஒரு தமிழக மலர்ச்சிக் கொழுந்தான தென்னகக் கலைஞனாகவும், அக்காலத் தமிழறிஞரான திருவள்ளுவரின் மரபில் வந்த ஓர் இக்காலத் தென்னக அறிஞனாகவும் விளங்குகிறார்.

'தமிழகம்' நம் காலத்திலே இந்தப்புதிய முத்தமிழ்ப்பொங்கல், புதிய புத்தமுதத்திருவினைப் பயனாகத் தந்துள்ளது.

நாடு பெறும் பாக்கியம் பெறவில்லை. இது மட்டுமன்று. காந்தியடிகளின் முறையை அவர் தலைமையில் இந்தியா பிரிட்டனுக்கெதிராகக் கையாண்டே வெற்றிபெற்றது. வல்லமை வாய்ந்த, ஆனால் நேர்மை வாய்ந்த, அறமுறை தெரிந்த ஒரு சீரிய எதிரியை எதிர்த்த ஒரு சீரிய தேசம் சீரிய தலைமையில் சீரிய இயக்கம் நடத்தியே இந்திய வெற்றி வீறுகண்டது. ஆனால் கொரியாவில் கொரியாக் காந்தியின் சீரிய தலைமை இருந்தும், கொரியமக்களின் விடுதலை ஆர்வம் இருந்தும், முறை சீரிய காந்திய முறையாய் இருந்தும், கொரிய காந்தியம் வெற்றிபெற

பெரியார் பொன்மொழி

கதர் என்பது மக்களைக் காட்டுமிராண்டித் தன்மை காலத்துக்குக் கொண்டு போவதற்கு என்றே கண்டு பிடிக்கப்பட்டதாகும்.

காந்தியடிகள் காலத்திலேயே கொரியாவிலும் பிறநாடுகளிலும் காந்தியடிகளைப் பின்பற்றி அரசியல் விடுதலை இயக்கங்களைச் சாத்துவீகமுறையில், அகிம்சை முறையில் நடத்த முனைந்த 'காந்தியடிகள்' பலர் இருந்தனர். ஆனால் இந்தியாவில் பிரிட்டிஷாரை எதிர்த்துக் காந்தியடிகளின் காந்தியம் கண்டமாபெரும் புகழ் வெற்றியை மற்ற நாட்டுக் காந்திகள் காணவில்லை.

காந்தியடிகளின் காந்திய வெற்றி காந்தியடிகளுக்கு மட்டும் பெருமை தரவில்லை. அது இந்தியாவுக்கும் பெருமை தந்தது. பிரிட்டனுக்கும் பெருமை தந்தது. இந்த உண்மையைக் கொரியா நாட்டுக் காந்தியின் வாழ்க்கை காட்டிற்று. காந்தியடிகளின் முறையை அவர் தலைமையில் இந்தியா கையாண்டு வெற்றி தந்தது. ஆனால் கொரிய காந்தியின் பெருமைக்கேற்றபெருமையைக் கொரியா



வில்லை. ஏனெனில் அங்கே எதிரி சீரிய எதிரியல்ல, சிங்கமாகிய பிரிட்டிஷ் ஏகாதிபத்தியமல்ல, புல்லனாகிய, குள்ள நரியாகிய சீன ஏகாதிபத்தியத்தை எதிர்த்த நிலையிலேயே காந்தியம் வெற்றி பெறவில்லை.

'வேழத்தில் பட்டு உருவும்
கோல் பஞ்சில் பாயாது!'

என்பது தமிழ் நீதிக் கவிதை நூல்கள் கூறும் உண்மை. யானையைக் குத்தி வீழ்த்தும் வேல், பஞ்சுப் பொதியை என்ன செய்யும்! இது போலத் தான் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியக் கற்கோட்டையைத் தகர்த்த காந்தியம் சீன ஏகாதிபத்தியத்தை என்ன செய்யக் கூடும்! அது மணற் சாக்குக் கோட்டையாயிற்றே!

தென்னகக் காந்தியம் சென்ற இருபதாண்டுகளில் அடைந்து வரும் வெற்றியின் கூறுகளை இது சுட்டிக் காட்டுகிறது. காந்தியடிகளைப் போலவே ஒப்பற்ற பெருந்தலைவர் தென்னகக் காந்தி. அவர் தலைமையில் போரிடும் படை காந்தியடிகளின் தலைமையில் போரிட்ட காங்கிரசுப் படையை விட எவ்வகையிலும் குறைந்ததன்று. ஆனால் அக்காந்தியத்தின் பெருமை -வெற்றியின் காரணம் - இவைமட்டுமல்ல. அவை எதிர்த்துநின்ற சக்தியும் பிரிட்டிஷ் பேரரசிக்குக் குறைந்த பெருமையுடையதன்று. பிரிட்டிஷாரும் மேனாட்டாரும் போற்றும்-காந்தியடிகளே போற்றும் நேரு பிரான் தலைமையில் இயங்கும் பெரிய தேசீயமே அது. அத்தகைய அறமுறைசான்று கற்கோட்டையை எதிர்த்ததனால் தான் தென்னகக் காந்தியும் தென்னகமும் இதுவரை இத்தனை வெற்றிகண்டது, இன்னும் காண இருக்கிறது!

தென்னகக் காந்தியின் புகழ், தென்னகக் காந்தியின் வெற்றி வருங்காலத்தில் தென்னகம் மட்டுமல்ல, இந்தியாவே பெருமை கொள்ளத்தக்க புகழும் வெற்றியுமாகும் என்பதில் ஐயமில்லை. திருவள்ளுவரை உலகுக்களித்து ஏற்கெனவே இந்தியாவுக்கு ஒப்புயர்வற்ற பெருமை தந்த தமிழகம், மீண்டும் தென்னகக் காந்திமூலம் புது வெற்றியையும் புகழையும் பாரதமாதா கழுத்தில் மாலைகளாக இட இருக்கிறது என்பதில் ஐயமில்லை.

காந்தியடிகள் பிரிட்டனுக்குத் தந்த புகழை அவர் கால உலகுக்குத் தந்த பெருமையை, அறிஞர் சி. என். ஏ. வருங்கால இந்தியாவுக்கு, ஆசியாவுக்கு, உலகுக்குக் கட்டாயம் அளிக்க இருக்கிறார்!

இது பொய்யல்ல என்பதைப் புல்லனாக்கிய சீனன் எறிந்த கம்ப வெடி உலகுக்கு இன்றே காட்டி வருகிறது.

பூயர்போர், முதல் உலகப் போர் ஆகியவற்றில் பிரிட்டனுக்கு ஆபத்து வந்தபோதும், இந்திய விடுதலைக்குச் சற்று முன்னே, 1945-ல் நாசிவிமானங்கள் லண்டன்மாநகர் மீதே பறந்து பகலும் இரவும் குண்டுமாரி வீசியபோதும், காந்தியடிகள் பிரிட்டனுக்கு உதவ, தம் மனமார்ந்த செயல் ஒத்துழைப்பையும் ஆன்மிக வலுவையும் பிரிட்டனுக்கு அளிக்கத் தயங்கவில்லை. ஆனால் அதே காலத்தில் வளர்ந்துவந்த நம்காலத் தென்னகக் காந்தி, அந்த இரண்டாம் உலகப் போரில், உலகில் ஜனநாயகம் காத்த பிரிட்டனுக்கும், இன்றைய சீனப் போரில் உலகில் ஜனநாயகம் காக்க முற்பட்ட பாரதத்துக்கும் ஒருங்கே காந்தி வழி நின்று போராடி, காந்தி

(8-ம் பக்கம் பார்க்க)

தம்பி !

இந்தியா ஒரு போலி அமைப்பு

வரலாறு தெளிவாக உணர்த்துவது, ஓர் பேருண்மை. நமது இடம், திரு இடம்; வடக்கே வேறு இடம்; இரண்டும் பிணைக்கிறார்கள்; அது ஒவ்வாது, என்பதை எடுத்துக் கூருத வரலாற்றுப் பேராசான்களும், உள நூல் வல்லோரும்- விலைக்கு வாங்கப்பட்டவர்கள் தவிர - இல்லை என்று கூறலாம்.

இந்தியா என்பது இயற்கையானது அல்லதான் – பல்வேறு இனங்களில் இருப்பிடங்கள் ஒன்ருக இணைக்கப்பட்டுள்ளன என்பதும் உண்மைதான் – என்ருலும், இந்தியாவை ஒரு நாடு ஆக்கி விட்டோம் - ஒரு பேரரசு அமைத்து விட்டோம்-இனி இதை மாற்றப் போவதல்லை என்று பேசுகின்றனர் அரசினர்.

இது வேதனை நிரம்பிய பேச்சு – இன உணர்ச்சி உள்ள எவரையும், செய் அல்லது செத்துமடி என்று தூண்டி விடக்கூடிய அறைகூவல், அது மட்டுமல்லாமல், ஒரு போலி அமைப்புத்தான் இந்தியா என்பதை வெட்கமின்றி ஒப்புக் கொள்ளுவதுமாகும்.

கிடைத்ததை விடமாட்டோம் என்று பேசுவது அறம் அறிந்தோர் பேச்சு அல்ல - ஆதிக்கக்காரரின் ஆவேசப் பேச்சு.

ஆனல் வரலாறும், இலக்கியமும் மறுக்க முடியாத விதத்தில் ஏற்படுத்தி வைத்துள்ள உணர்ச்சி, வழி வழி வளர்ந்து, பண்பாடு ஆகி, இருக்கிறது; அந்த 'உணர்ச்சியை' அழித்து விடுவது, இயலாத காரியம் என்பதை, இன்று ஆதிக்கத்தை நம்பிக் கொண்டிருக்கும் அரசினர். ஒப்புக் கொள்ள மறுக்கிறார்கள்.

ஆனல் உரிமைக்காக எதனையும் இழந்து விடும் வீர உணர்ச்சி, தியாக உள்ளம், கொழுந்துவிட்டு எரியும்போது ஆணவம் வெந்து கருகிச் சாம்பலாகும்.

ஆனந்தவிகடனின் போக்கிரித்தனம்

கதிரவன் விழித்தெழும் கன்னியாகுமரி முனையில்கூடிய தென்மாநில முதலமைச்சர்களும்—பட்டம் தாணுவைச் சத்த மில்லாமல் தன் ராஜதந்திரத்தின்மூலம் கொலுப்பொம்மையாக்கியவரும், கேரளத் தலைவலி அரசியலுக்குச் சரியான நிவாரண மாத்திரையெனப் பயன்பட்டார் எனத் தில்லி வட்டாரத்தில் பெயர்பெற்ற லால்பகதூர் சாஸ்திரியாரும் கூடி பிரிவினைசக்திகளை ஒடுக்கத் தடைச்சட்டம் கொண்டுவருவதென அவசர முடிவெடுத்தார்கள்.

"பிரிவினை கேட்டால் தடை."

"தி. மு. கழகத்தை ஒடுக்கத் தடைச் சட்டம்."

இப்படிப் பரபரப்பான தலைப்பிட்டு கன்னியா குமரி முடிவைப் பெரிதுபடுத்திக் காட்டின தமிழகத்து நாளிதழ்கள்.

மற்ற பத்திரிகைகளும், சில அரசியல் விதவைகளும் அவரவர்கள் அறிவுக்குத் தகுந்தபடி குமரியின் முடிவை விமர்சிக்கத் தொடங்கினர்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் இதயம்போன்ற தலைவர் அறிஞர் அண்ணு அவர்கள் லால்பகதூராரின் முடிவை மிக நிதானமாகச் சிந்தித்து "போர் சம்பந்தமாக இந்திய அரசின் கரத்தை வலுப்படுத்தும் பணியில் தி. மு. கழகம் ஈடுபட்டிருக்கும் பொழுது தடைச்சட்டம் கொண்டுவருவது நல்லதல்ல. அதற்காக எங்கள் ஒத்துழைப்புக் குறையாது. மேலும் வலுப்பெறும்" என்று அறிக்கை விடுத்ததின்மூலம் அவர் தென்னகத்துக் காந்தி என்பதை உறுதிப்படுத்திக் கொண்டார்.

அறிஞர் அண்ணு அவர்களின் இந்த முடிவை எல்லோரும் பாராட்டினர். பல பத்திரிகைகள் 'சபாஷ்'போட்டு எழுதின.

ஆனல் ஆனந்த விகடன் என்ற ஏடுமட்டும் தென்னகச்துக் காந்தியாம் அறிஞர் அண்ணு அவர்களின் முடிவை விகடத்தனமாக ஆராய்ந்து, குறும்புத்தனமாக விமர்சித்து, போக்கிரித்தனமாகத் தலையங்கம் தீட்டியிருக்கிறது.

"பாவலர்களும், படித்தவர்களும் அந்தக் கட்சியிலே பலபேர் இருந்தும், கிளர்ச்சி, கண்டனம், பிரிவினை என்ற அன்புக்கு மாறுபட்ட கொள்கைகளிலேயே அவர்களது காலமும் நேரமும் வீணுவதைக் கண்டு விகடன் பன்முறை வருந்தியது உண்டு." இந்த வாசகங்கள் *13-1-63* ஆனந்த விகடன் தலையங்கத்தின் ஒரு பகுதி.

"உன்னைச் சந்தேகக் கண்கொண்டு கூர்ந்து கவனித்து வரும் ஒருவன், உன் தோள்மீது கைபோட்டால் அது உன்னை அணைப்பதற்கல்ல—கழுத்தை நெறிப்பதற்காகவும் இருக்கலாம்."—இப்படிச் சொன்னவன் வால்டேர்.

தி. மு. கழகத்தில் படித்தவர்களும், பாவலர்களும்நிறைய இருக்கிறார்கள் என்று பெருமைபடப் பாராட்டி, விகடனர் நம் தோள்மீது கைபோடுவது பின்னலே கழுத்தை நெறிப்பதற்குத் தான்.

தி. மு. கழக பாவலர்களின், படித்தவர்களின் சக்தியெல்லாம் அன்புக்கு மாருன வழியில் விரயமாகியதாம். அதைக் கண்டு விகடன் பலமுறை வருந்தினனம்.

விகடன் ஏன் வருந்தினன்?

அவர்களென்ன குறுக்கெழுத்துப் போட்டி நடத்தி கொள்ளை லாபமடித்தார்களா? அம்மாமி நடை விலை போகவில்லை என்று தெரிந்தவுடன், அழகு தமிழ் மொழியை வியாபாரத்திற்காகக் கையாண்டார்களா? தொழிலாளர்களின் வயிற்றில் மண்ணையடித்து மாளிகை கட்டினர்களா?

"நல்ல தமிழ் நாட்டிலே, மன்றங்களிலே ஒலிக்கிறதென்றல் அதற்கு தி. மு. கழகத்தவர்தான் காரணம்" என்று விகடனே முன்பு எழுதினனே அது இன்றைய விகடனுக்கு நினைவில்லையா ?

அவர்கள் சக்தி நல்ல காரியத்துக்குத்தான் பயன் படுகிறது என்று தெரிந்தும் கிளர்ச்சி, கண்டனம்போன்ற அன்புக்கு மாருன வழியில் விரயமாகிறதென்று விளையாட்டுத்தனமாக விகடன் ஏன் எழுதினன் ?

கிளர்ச்சியும் கண்டனமும் செய்திராவிட்டால் அன்னைத் தமிழ் அரியாசனம் ஏறியிருக்குமா ? இந்தி அரக்கி இடம் கொடுப்பாளா? "இந்திமொழி எந்தக் காலத்திலும் கட்டாயமாகத் திணிக்கப்படமாட்டாது" என்ற உறுதிமொழி பண்டித நேருவிடமிருந்து புறப்பட்டு வருமா?

இதையெல்லாம் விளங்கிக்கொள்ளாமலா எழுதினன் விகடன். இல்லை! இல்லை! அவன் இப்பொழுது புதிய தரகு வியாபாரத்தில் ஈடுபட்டிருக்கிறன்.

"பிரிவினையைத் தடுக்கச் சர்க்கார் சட்டம் கொண்டுவந்தாலும் சரி, கொண்டு வராவிட்டாலும் சரி, இனி பிரிவினை என்ற பேச்சையே நாங்கள் எடுக்கப் போவதில்லை" என்ற முடிவுக்கு தி. மு. க. வந்துவிடவேண்டும்.... "இனி தனித்து ஒதுங்கப் போவதில்லை. கூடி உயரப் போகிறேம்" என்று சொல்ல அவர்கள் இப்பொழுது முன்வரவேண்டும்.

இதற்குள்ள ஒரே வழி அவர்கள் காங்கிரசில் சேர்ந்து விடுவதுதான்.

நாலாந்தர ஏடு கூட எழுதக்கூசும் வார்த்தைகளை விகடன் சர்வ சாதாரணமாக எழுதிவிட்டான்.

தி. மு. கழகம் விடுதலை பற்றியே பேசக்கூடாதாம். இதற்குள்ள ஒரே வழி தி. மு. கழகம் காங்கிரசில் சேர்ந்துவிடுவது தானம்!

இந்தக் குறுக்கு வழித் தரகு வியாபாரத்தை விகடன் புதிதாகத் தொடங்கியிருக்கிறனு? இல்லை தமிழ்நாட்டுக் காங்கிரஸ் அமைச்சர் பெருமான்கள் விகடனுக்கு இந்த வேலையைக் கொடுத்து தூதனுப்பியிருக்கிறர்களா?

இதனல் விகடன் பெறப் போகும் சன்மானம் என்ன? புதிய பர்மிட்டா? கோட்டாவா? பதவியா?

அது எதுவாக இருந்தாலும் சரி இப்பொழுது விகடன் எடுத்துக்கொண்டிருக்கும் வேலை – வீதியில் நின்றுகொண்டு விழியடித்துக் கூப்பிடும் விலைமாதின் வேலையைவிட மிகக் கேவலமானது.

தி. மு. கழகத்தின் உயிர்க்கொள்கை திராவிட நாடு விடுதலைப் பிரச்சினை. இதயத் துடிப்பிற்கும் அதற்கும் வேறுபாடே கிடையாது. இந்தத் தலைமுறையில் அதைப் பெற்றுவிட முடியும் என்ற அசைக்கமுடியாத நம்பிக்கை தி. மு. க. கழகத்தவருக்கு உண்டு.

பொதுக்கூட்டத்தில், விவாத அரங்கில், சட்ட மன்றத்தில், மாநில அவையில் திராவிட நாடு பற்றி அழுத்தம் திருத்தமாக ஆதாரத்துடன் விவாதித்திருக்கின்றேம்.

கோடிக்கான மக்களின் நெஞ்சங்களை இக்கொள்கை ஈர்த்திருக்கிறது. பல இலட்சக்கணக்கான உயிர்களின் இதயநாதமாக விடுதலைக் கொள்கை ஒலித்துக்கொண்டிருக்கிறது.

இதற்காக உயிர்விடவும், தியாகம் செய்யவும், தங்களையே அர்ப்பணித்துக் கொள்ளவும் பல்லாயிரக் கணக்கான குடும்பங்கள் தயாராக உள்ளன.

தடைச் சட்டமெனும் மிரட்டலுக்குப் பயந்து திராவிடநாடு விடுதலைக் கொள்கையை தி. மு. கழகம் கைவிடாது. அப்படிப் பட்ட பலவீன இதயங்கள் இப்பொழுது கழகக் கூடாரத்தில் அறவே இல்லை.

"உள்நாட்டுப் போர் ஏற்பட்டாலும் இன்னெரு பிரிவினைக்குச் சம்மதிக்கமாட்டேன்" என்று மதுரையம்பதியில் பண்டித நேரு போர்க்குரல் கொடுத்தபோது அதற்குத் தி. மு. கழகம் என்ன பதில் சொல்லிற்று என்பதை விகடனர் மறந்திருக்க முடியாது.

இப்பொழுது அந்நியன் ஒருவனல் இந்தியத் துணைக்கண்டத்துக்கு வந்திருக்கும் பேராபத்தை உணர்ந்து, பொது எதிரியை விரட்டியடிக்கும் ஒரே குறிக்கோளுடன் தி. மு. கழகம் எல்லா வகையிலேயும் நேருவின் கரத்தை வலுப்படுத்தும் தூய பணியில் ஈடுபட்டு வருகிறது.

"இந்தச் சமயத்தில் தி. மு. கழகத்தை ஒடுக்கத் தடைச் சட்டம் கொண்டு வருவது - வீடு வெந்து போகாமல் தீயை அணைத்தவன் மீது நெருப்பை வாரி இறைக்கும் நெறி கெட்ட வேலை போன்றது" என்று எழுதிக் காட்டவேண்டிய ஆனந்த விகடன் கழகத்தவரை காங்கிரசில் சேரச் சொல்லி சிபாரிசு செய்கிறது.

"புலியின் வாலை முறுக்குவதும், சிங்கத்தின் பிடரி மீதமர்ந்து கொண்டு சவாரி செய்ய எண்ணுவதும், இந்த நேரத்தில் தடைச் சட்டம் கொண்டு வரத் தீர்மானித்திருப்பதும், விளையாட்டுத்தனமான – பொறுப்பில்லாத போக்கு" என்று அரசினர்க்கு அறிவுறுத்த வேண்டியது ஆனந்தவிகடனின் கடமை!

அதுதான் பத்திரிகாதர்மமும் கூட!

"நான் கண்ணை மூடிய பிறகு காங்கிரசைக் கலைத்து விடுங்கள்" என்று காந்தியார் சொல்லிப் போனர். இன்னும் அந்தக் காரியத்தைக் காங்கிரஸ்காரர்கள் செய்து முடிக்கவில்லை?

"காங்கிரஸ் தலைவர்களே! காந்தியார் சொல்லிப் போனபடி இன்னும் ஏன் கட்சியைக் கலைக்காமலிருக்கிறீர்கள்? உடனேகலைத்துவிட்டு வேறு எந்தக் கட்சியோடாவது சங்கமமாகுங்கள். காந்தியார் மனத்தைச் சாந்திபடுத்துங்கள்" என்று ஆனந்த விகடனர் என்ருவது தைரியமாக எழுதியதுண்டா? ஏன் எழுதவில்லை ?

காங்கிரஸ் கட்சியைக் கதர்ச் சட்டைக்காரர்கள் கள்ளச் சந்தையாக்கி, கொள்ளை லாபமடித்து வருகிருர்கள் என்ற கருத்து பரவலாக இருந்து வருகிறதே. அந்தச் சந்தையில் விகடனரும் ஓர் வியாபாரியோ?

அதனல்தான் காங்கிரசைக் கலைத்துவிடும்படி காந்தியாரே சொன்னதைக்கூடத் தைரியமாக எழுதவில்லையோ?

(10-ம் பக்கம் பார்க்க)

நல்முத்தே ! திசைவிளக்கே !

" தம்பிகளில் தலை சிறந்த கலைஞர் ஏறே!
தமிழ்நாட்டு மலைச் சாரல் குளிர்பூங் காற்றே!
கொம்புத்தேன் பேச்சழகே! கடலாழத்தே
குளித்தெடுத்த நல்முத்தே! பகையை வீழ்த்தும்
அம்பொத்த செயல் மறவ! சங்க கால
ஆன்ருேரின் புறப்பாட்டே! இளைஞர் நெஞ்சில்
தெம்பேற்றும் எழுத்தாள! தமிழர் வாழ்வின்
திசைவிளக்கே! வாழ்கவென வாழ்த்துகின்ருேம்"

— கவிஞன்

தம்பி!

விடுதலை ஆர்வம்

வேண்டும் !

இவ்வளவு பலமாக அமைத்து விட்டிருக்கிறேம். ஆதிக்கத்துக்கு அரண்கள் உள்ளன; படைகளை அமைத்திட பண பலமும் உண்டு என்று இறுமாந்து கிடப்போர், இந்தியப் பேரரசு என்றென்றும் நிலைத்து இருக்கப் போகிறது என்று எண்ணுகிருர்கள்.

எனினும், அவர்களுக்கே சிற்சிலபோது, ஐயப்பாடும், அச்சமும், கவலையும், கலக்கமும் ஏற்பட்டு விடுகிறது; கை பிசைந்து கொள்கின்றனர்; இந்தியர் என்ற உணர்ச்சி இல்லையே! என் மொழி! என் பிரதேசம்! என்று பேசுகிருர்களே. அதற்கு ஏதேனும் கெடுதல் நேரிடும் என்று தெரிந்தால், பேயாட்டமாடுகிருர்களே! என்று பேசுகிருர்கள், மனம் மருண்டு.

பேரரசு அமைத்துவிடலாம்–பலர் அமைத்தனர்–அதனை உடைபடாமல் பாதுகாக்கவும் செய்யலாம் வெகுபாடுபட்டு- ஆனல் பிணைக்கப்பட்ட நாடுகளிலே, ஏற்பட்டு விடும் மனக்கசப்பு,மாருது. அது சமயம் பார்த்துக் கொண்டு இருக்கும் நச்சரவம் போன்றது.

புயலில் வீழும் பெருமரங்கள், நாலைந்து நாட்களுக்கு முன்பே, நான் விழப் போகிறேன். என் வேர்கள் நைந்து போயுள்ளன. பெரும் காற்றடித்தால் தாங்கி நிற்கும் வலிவு எனக்கு இல்லை- என்று அபாய அறிவிப்பாக தருகிறது.

காரணமற்ற அடிப்படைக் கோளாறுடன், அமைக்கப்படும் எந்தப் பேரரசும், விடுதலை ஆர்வம் முற்றிப் புரட்சிப் புயலாக மாறும்போது, பொடிப் பொடியாகித் தான் போகும்.

தமிழக மெங்கணும், தமிழ் இன உணர்வு வீரமணம் எழுப்பினல், பிற நாட்டார் நம்மை அறிந்து கொள்ளச் செய்வதிலே கஷ்டம் அதிகம் இருக்காது.

5-ம் பக்கத் தொடர்ச்சி

யம் இன்னும் உயிருடனிருக்கிறது. அது புத்தொளி வீச இருக்கிறது என்பதைக் காட்டியுள்ளார்.

சந்திரனுக்கு ஒரு மறு உண்டு.

சூரியனுக்குக் கூடக் கறை உண்டு.

ஆம். காந்தியத்துக்கு, அகிம்சைக்குக்கூட ஒரு கறை இல்லாமலில்லை.

கறை இல்லாவிட்டால் இந்த ஒளிகளை மனித உலகம் எப்படிக் காணமுடியும்?

மற்றப் போர்களில் அழிவு இருபக்கங்களுக்கும் இருக்கும் —ஆனல் தோற்ற எதிரிக்கே அழிவும் இழப்பும் இகழும் மிகுதி. வெற்றிபெற்றவர்க்கு அழிவு இருந்தாலும் புகழ் உண்டு.

காந்திய அறப்போரில் ஈடுபடுபவர்கள் வெற்றி காண்பது உறுதி. ஆனல் அதில் ஏற்படும் அழிவுகள், இழப்புகள், சில சமயம் தற்கால இகழ் கூட, வெற்றிநீடும் அறப்போர் வீரர்களுக்கன்றி எதிரிகளுக்கல்ல. ஏனெனில் அவர்கள் அலெக்சாண்டர், சீசர், நெப்போலியன் மரபில் வந்தவர்களல்லர்; புத்தர், இயேசு, காந்தி ஆகியோர் மரபில் வந்தவர்கள்.

தென்னகக் காந்தியப் படைவீரர் முற்காலக் காந்தியப் படைவீரரைப் போலவே, தம் போரினிடையே தலைவனிடமிருந்து படைகள் காணாத விசித்திரக் கட்டளை கேட்டனர். போரை நிறுத்துங்கள். அறப்போரை நிறுத்துங்கள். ஏனெனில் அறத்துக்காக ஓர் அறவோனை எதிர்த்து நாம் போரிட முற்பட்டோம். இப்போது அந்த அறவோனுக்கே, அறத்துக்கே ஆபத்து ஏற்பட்டுள்ளது. அறத்தையே உலகில் அழிக்க முற்பட்ட ஒரு சைத்தான் சக்தி உறுமிக்கொண்டு வருகிறது. மனிதனை எதிர்த்து மனிதராகப் போராடினோம். போரிடும் மனிதரின் மனிதத் தன்மையை யெல்லாம் அழிக்க முற்பட்டிருக்கும் மலேரியாக் கிருமிகள் படையெடுத்திருக்கும்போது, இப்போது மனிதருடன் மனிதர் போரிட வேண்டாம். அறப்போரை விட்டுவிட்டு, அறத்துக்கான போருக்கு அறமுறை பயின்ற நம் பழைய தோழர்களுடனேயே சேர்ந்து போராட எழுங்கள்' என்று புதிய காந்தியக் குரல் எழுந்தது.

காந்தியடிகளைக் கண்டது பாரதம், கீழ்த்திசை உலகம். அது நீடூழி வாழ்க!

தடைச் சட்டம் பற்றி

குமுதம்

கூறும் கருத்து

சில அரசியல்வாதிகளின் ஆசையில் மண்ணைக் கொட்டி, சீனனுடைய கண்களைச் சிவக்க வைத்து தேசத்தை நேசிப்பவரைத் தென்றலாய்த் தழுவிய அந்தப் புத்தாண்டுச் செய்தி எது?

தி. மு. க. தலைவரின் அறிக்கைதான். ஸ்ரீ லால் பகதூர் சாஸ்திரிக்கு அவர் தந்த பதில்தான். பிரிவினை கோஷத்தைச் சட்டவிரோதமாக்க வேண்டும் என்ற தென்மண்டல ராஜ்யங்களின் தீர்மானம்பற்றித் திரு. அண்ணதுரை வெளியிட்ட கருத்துத்தான்.

"பிரிவினையில் இப்போது எங்களுக்கு அக்கறை இல்லை. சீன ஆக்கிரமிப்பைச் சமாளிக்க அரசாங்கத்தின் கரத்தைப் பலப்படுத்துவதே எல்லாக் கட்சிகளின் முதல் கடமையாகும். இதில் எங்களுக்குச் சந்தேகமில்லை!" என்று அவர் பெட்டியில் ஆணி அடித்தாற் போல் பேசியிருக்கிறார்.

தேன் என்கிறார்கள். கருப்பஞ்சாறு என்கிறார்கள். அவையெல்லாம் இந்த வார்த்தைகளின் தித்திப்புக்கு முன் எம்மாத்திரம்?

ஸ்ரீ லால்பகதூர் சாஸ்திரி கெட்டிக்காரர்தான். ஆனல் திரு. அண்ணதுரை, சாஸ்திரியாரைவிடப் பெரிய கெட்டிக்காரர் என்று தோன்றுகிறது.

சாஸ்திரியார் தம் கடமையைச் செய்து கண்டனத்தைத் தேடிக்கொண்டார்.

திரு. அண்ணதுரையோ தம் கடமையைச் செய்து புகழ்மாலை சூடிக்கொண்டார்.

"உறங்கும் புலியை உசுப்பிவிடுகிறார் போல் சாஸ்திரியார் இப்போது எதற்கு இந்தப் பேச்சைக் கிளப்புகிறார்? தி. மு. க.வே பிரிவினையை மறந்து தேசிய சக்திகளுக்குத் தோள் கொடுத்து வருகையில், எதற்கு அனுவசியமாகப் பரணிலிருந்து மூட்டையை இறக்கிப் பரபரப்போடு பிரிக்கவேண்டும்" என்று கையைப் பிசைந்தவர்கள் உண்டு.

ஆனல் அவர்கள் பயப்பட்டபடி ஒன்றும் நடக்கவில்லை. "எல்லைப் போரைக் காட்டி எங்கள் பல்லைப் பிடுங்கவா பார்க்கிறீர்கள்? இந்தியா எக்கேடு கெட்டோ போகட்டும். திராவிட நாடு திராவிடருக்கே!" என்று தி. மு. க. வினர் முருங்கை மரத்தில் ஏறிக்கொண்டுவிடவில்லை. மாருக—

பொறுமை இழக்காமல், நிதானமாக பெருந்தன்மையோடு நடந்துகொண்டிருக்கிறார்கள்.

"சீன ஆக்ரமிப்பை வெற்றிகரமாக எதிர்ப்பது மிகவும் முக்கியம். அதிலிருந்து மக்கள் கவனத்தைத் திருப்பக்கூடிய எந்தச் சர்ச்சையிலும் நாங்கள் கண்டிப்பாக ஈடுபடமாட்டோம்!" என்று அவர்கள் சந்தேகத்துக்கு இடமின்றிச் சொல்லிவிட்டார்கள்.

பாராட்டுவதற்குப் பதில் இதைக் கேவலம் ராஜதந்திரம் என்றே, தர்மசங்கடத்தில் மாட்டிக்கொண்டவர்கள் வேறு வழியில்லாமல் செய்த, மீசையில் மண்ணொட்டாத் தீர்மானம் என்றே யாரும் இகழ்ந்தால் நாடு பிழைக்க வேண்டும் என்ற நல்விழைவு இப்படிப் பரிகசிப்பவரிடம் இல்லை என்றுதான் பொருள் கொள்ள வேண்டியிருக்கும்.

.. தி. மு. க. வினர் பல சாதனைகள் செய்திருக்கக்கூடும். ஆனல் எல்லாவற்றைக் காட்டிலும் அவர்களுக்கு உண்மையான மதிப்பைத் தேடித் தந்திருப்பது இப்போது செய்திருக்கிறார்களே அந்தச் சாதனைதான்.

தென்னகக் காந்தியைக் கண்டது தென்னகம், தென் திசை உலகம்; அது நெடு நீடூழி வாழ்க!

காதல் வாழ்வில் தன் எதிரியான மாதவியிடம் கணவனைச் சென்று வாழ விட்டிருந்த கண்ணகி, கூற்றுவனிடம் அவனை ஒப்படைத்தபொழுது வாளா இருக்க முடிந்ததில்லை. அறமுறை தெரிந்த பண்புடைச் சக்தியிடம் காட்டிய எதிர்ப்போடு அறமுறை தெரியாக் கயமைத் தனம்வாய்ந்த எதிரியிடம்நின்று விடாது, தென்னகம்! கண்ணகியின் கற்புக்கனலின் மரபில் வந்த அதன் வீரத்தீ சீன ஆட்சியாளனின் வெறியை அழித்து அதன் மீது நடனமிட்டே தீரும்!

தென்னகக் காந்தியின் காந்தியம் பாரதத்துக்குப் புகழ் தேடித் தருமுன் பாவிக்கு முதலில் கல்லறை கட்டுவதையே தன் முழு நோக்கமாகக் கொண்டுவிட்டது!

கண்ணகிமரபுடன் திருவள்ளுவர் மரபும் கலந்து, காந்திய சோதியில் மிளிரும் தென்னகக் காந்தியம் உலகெங்கும் வருங் கால வானில் ஒளி வீசுக!

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

நல்ல முற்போக்கு ஜனநாயகவாதியாக இல்லை. இந்தியாவின் நிலப்பிரபுக்கள் பெரும் பூர்ஷுவாக்கள்-பாசிஸ்ட் ஆட்சியிலிருந்து—ஏகாதிபத்திய ஆட்சியிலிருந்து இந்தியா விடுதலை பெறவேண்டியிருக்கிறதென்று சீனம் எண்ணுகிறதா? பொருளாதார ரீதியாக இந்தியா சீர்கேடுற்று விட்டது; எனவே இந்திய மக்கள் அதிருப்தியுற்றிருக்கிறார்கள். எனவே தங்களை விடுதலை செய்ய சோஷலிசத்தின் சீன இராணுவத்தை வரவேற்பார்கள்என்றுஎண்ணுகிறதா?

பீகிங் வனெலி கொட்டும் நகைப்புக்கு இடமான பிரச்சாரத்தைப் பார்க்கும் போது அப்படித்தான் தெரிகிறது.

—நாட்டு நடப்பைக் காட்டிலும், பீகிங்பிரச்சாரமே டாங்கே அவர்களுக்கு நம்பிக்கையூட்டுவதாக இருக்கிறது!

நேரு ஜனநாயகவாதியல்ல!

இந்தியாவில் பாசிஸ்ட் ஆட்சி!

ஏகாதிபத்திய ஆட்சி!

—இந்தக் கொடுமைகளினின்று விடுதலை பெற இந்திய மக்கள் சீனரை வரவேற்பார்களாம்! இந்திய மக்கள் அனைவரின் சார்பிலும் மா-சே-துங்கிற்கு நம்பிக்கை வாக்குமூலம்கொடுக்கிறார் டாங்கே! பிதா இறந்துவிட்டார் என்றால், பிணம் இந்தப்பக்கம்தானே வரும்—என்று கூறிக் கொண்டே ஏழைகளின் குடிசைகளில் 'படி அளந்து' கொண்டிருக்கும் 'தவ சிரேஷ்டர்'களின் தலைவரல்லவா அவர்! அவருடைய சொற்பொழிவுக்கு ஒரு தனித் தன்மை வேண்டாமா? அதுதான் இந்த நச்சுக் கருத்து!

(அடுத்த இதழில் முடியும்)

நெல்லைச் சதி வழக்கு முழு விவரம்!

(சென்ற இதழ் தொடர்ச்சி)

411 காங்கிரஸ் பாஸிஸ்டுத் தாக்குதலை எதிர்க்க 26-11-49 தடையெதிர்ப்பு வேலை நிறுத்தம். தென்னிந்திய ரயில்வே தொழிற் சங்கத்தின் அச்சிட்ட வெளியீடு.

413, 414 மாகாணக் கமிட்டியின் 2-வது வெளியீடு முடிவுகளும் உடனடி வேலைகளும்.

417 மாகாணக் கமிட்டியின் வெளியீடு எண் 9. இரயில்வே அரங்கத்தில் நமது உடனடி வேலைகள்.

418 தென் கல்கத்தா உபதேர்தல் பற்றி மத்திய, மாகாணக் கமிட்டிகளின் 29-6-49 நாளிட்ட அறிக்கை எண் 9.

419 அரசியல் கொள்கை விளக்கம் பற்றி காம்ரேட் பி. டி. ரணதிவே எழுதிய வெளியீடு.

420 "போலீஸ் ஜவான்களே காங்கிரஸ் பணமூட்டை சர்க்காரைக் காப்பாற்றுகிறீர்கள்" அச்சிட்ட வெளியீடு.

421 சுற்றறிக்கை எண் 5. கம்யூனிஸ்ட் கட்சியின் அறைகூவல்,

422 விக்கிரமசிங்கபுரம் மில் தொழிலாளர் சங்கத்தின் சார்பில் 'கருங்காலிகளைக் கறுவறுங்கள்' என்ற தலைப்பில் வெளியிடப்பட்ட அறிக்கை.

423 தென்னிந்திய ரயில்வே தொழிற்சங்கம் தொழிலாளர்களின் சம்பளத்தில் ஒரு ரூபாய் சம்பளக் குறைப்பை ஏற்படுத்தும் திட்டங்களை முறியடிக்க விடுத்த ரகசிய அறிக்கை.

424 திருநெல்வேலி தொழிற்சங்க யூனியன் 'ஹரிகரநாத் சாஸ்திரியே திரும்பிப்போ' என்று எச்சரித்து வெளியிட்ட அறிக்கை.

425 மாகாணக் கமிட்டியின் எச்சரிக்கைக் கடிதம் தலைவர்கள் கைதானது பற்றி.

426 தலைவர்களைக் கொல்ல சதி நடப்பதாக மாகாணக் கமிட்டியின் எச்சரிக்கை நோட்டீஸ்,

427 மாகாணக் கமிட்டியின் கார்பன் காப்பி நகல் அறிக்கை - வழக்குகள் விசாரணையின்போது கோர்ட்டில் நடந்துகொள்ள வேண்டிய முறைகள்.

440 ஆம்பூர் நடராசனுடைய எலும்புக்கூடு தோண்டியெடுக்கப்பட்ட இடத்தின் சாதாரண வரைபடம்.

442 மாகாணக் கமிட்டியின் அறிக்கை சிறையிலுள்ள தலைவர்களின் உண்ணுவிரதம் பற்றி.

443 வேலூர் சிறையிலுள்ள தோழர்களின் போராட்டம் பற்றி கட்சியின சர்குலர்.

444-446 வேலூர் சிறையிலுள்ள குற்றவாளிகளின் பட்டியல் மாகாணக் கமிட்டியின் சர்க்குலர். சர்க்காரின் அத்து மீறிய நடவடிக்கைகள். எம். கல்யாணசுந்தரம் - உமாநாத்ராவ் - பி. எம். சுப்பிரமணியம் ஆகியோரின் உண்ணுவிரதம் ஆகியவை பற்றி.

450 தெலுங்கானு வீரர்கள் தினம் பற்றிய மாகாணக் கமிட்டியின் கண்டனக் குறிப்பு ஆகஸ்ட் 15 கண்டன தினம். ஜில்லா போர்டுத் தேர்தல் பற்றிய ஜில்லாக் கமிட்டி முடிவுகள் காம்ரேடுகளின் கடமை'

452 ஆம்பூர் நடராசனுடைய உடல், கழுத்து, எலும்புக்கூடுகள் புதைக்கப்பட்டிருந்த இடத்தின் அமைப்பைக் காட்டும் படம்.

462 இந்திய சர்க்காரின் அறிவிப்பின்படி இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் கிளையை ஆந்திர கேரள தமிழகப் பகுதிகளில் தடை செய்யும் சென்னை சர்க்காரின் உத்திரவு.

464-465 கம்யூனிஸ்ட், திராவிடர் கழக உறுப்பினர்கள் 5 நபர்களுக்கு மேல் சேர்ந்து இருக்கக்கூடாதென்று தடை விதிக்கும், நெல்லை மாஜிஸ்திரேட்டின் 144 தடை உத்தரவு. நெல்லை, தூத்துக்குடி விக்கிரமசிங்கபுரம் பகுதிகளில் அமுல்படுத்த வேண்டும்.

473 காமிர்ன்பாம் விவகாரங்களைப் பற்றிக் காம்ரேட் ரணதிவேயின் அறிக்கை.

474 ஸ்டாலின் 70-வது பிறந்ததினம் பற்றி கட்சியின் மத்தியக் கமிட்டி அறிக்கை.

476 "மத்திய மோசடியை அம்பலமாக்குவோம்" என்ற அறிக்கை ஜில்லாக் கமிட்டியின் அலுவலகத்தில் எடுக்கப்பட்டது.

478 சிறையிலுள்ள கைதிகளைப் பலாத்காரமாக விடுவிக்க மாகாணக் கமிட்டி தரும் யோசனைகள் அடங்கிய சர்க்குலர்.

479 பிப்ரவரி 28—1949 கண்டன ஆர்ப்பாட்டங்கள் பற்றிய மாகாணக் கமிட்டியின் விளக்கமும், புதிய உத்திரவுகளும்.

481 சைதாப்பேட்டை சப்-ஜெயிலில் காம்ரேட் கல்யாணசுந்தரம் உண்ணுவிரதப் போராட்டம் பற்றி மாகாணக் கமிட்டியின் அறிக்கை.

483 மாகாணக் கமிட்டியின் A 19-20 அறிக்கைகள் – சிறைச்சாலைகளுக்கு முன்னல் பொதுமக்களைத் திரட்டி போராட்டம் நடத்துவதற்காக தயாரிக்கப்பட்டவை. ஜில்லாக் கமிட்டி அலுவலகத்தில் எடுக்கப்பட்டன.

485 மார்ச் 9-ம் தேதி 1950 ஒருநாள் ஆட்சேபனை வேலைநிறுத்தம் வாபஸ் பெறப்பட்டது பற்றிய சர்க்குலர் எண்—21 ஜில்லாக் கமிட்டியில் கைப்பற்றப்பட்டது.

487 மாகாணக் கமிட்டியின் ரகசிய சுற்றறிக்கை ஏப்ரல் 3 கருப்புச் சட்டத்தின் கண்டன தினம்.

493 பார்ட்டிசான் போராட்டம் பற்றிய மாகாணக் கமிட்டியின் அறிக்கை.

495 மாகாணக் கமிட்டி செயலாளரிடமிருந்து மாவட்டக் கமிட்டிக்குச் செய்திக் கடிதம். சென்னை வென்டன்சியரிச் சிறையில், நேரு, படேல் கொள்கைகளை எதிர்த்துக் கம்யூனிஸ்ட் கைதிகளின் போராட்டம் பற்றி.

497 பொலிட் பிரோ அறிக்கையின் (எண்-1) நகல் பிரதி அஸ்ஸாம் மாகாணக் கமிட்டியைப் பற்றிய தீர்மானம்.

499 அஸ்ஸாமில் சீர்திருத்தவாதம் மார்ச் 1-ம் தேதிக் குறிப்பின் அவசியம் பற்றிய அறிவிப்பு.

501 அகில இந்திய சமாதானக் கமிட்டியின் வெற்றிகளைப் பற்றி மேற்கு வங்கக் கம்யூனிஸ்ட் கட்சிக்கு அ. இ. க. க. பொதுச் செயலாளர் எழுதிய கடிதத்தின் அச்சடிக்கப்பட்ட சரியான நகல். அண்ணமலைப் பல்கலைக் கழக மாணவர் கிளர்ச்சிக்கு ஆதரவாகக் கட்சியின் முடிவுகள்,

502 சேலம் சிறையில் துப்பாக்கிப் பிரயோகம் பற்றியும், தெலிங்கானு வீரர்களைத் தூக்கிலிடுவது பற்றியும் மாகாணக் கமிட்டி ரகசிய அறிக்கை.

521 'தெலிங்கானு வீரர்களைத் தூக்கிலிடாதே' என்ற தலைப்பில் மாவட்டக் கமிட்டி தயாரித்த அறிக்கையில் பென்சில்—கார்பன் நகல் பிரதிகள்.

545 காதரைன் என்ற காரிகையின் அண்ணன் சேவியர் பாண்டியனுக்கு மீனுட்சிநாதன் விக்கிரமசிங்கபுரம் முகவரிக்கு எழுதிய அஞ்சல் அட்டை (தேதி 14-8-49)

546 தூத்துக்குடியைச் சேர்ந்த செல்லம்மாள். அங்கம்மாள் என்ற பெண்களுக்கு பாலதண்டாயுதம் எழுதிய கடிதம் அஞ்சல் அட்டை (தேதி 15-8-49).

[கம்யூனிஸ்டுகள் மீது காவல் துறையினர் பொய் வழக்குப் போடவில்லை. கள்ளத்தனச் செயல்களைக் கொடுத்த இத்தனைசான்றுகளையும் அடிப்படையாக அமைத்துத்தான் ஆயுள் தண்டனை தரப்பட்டது. அந்தத் தண்டச் சோற்று வீரர்கள் இன்று 'தியாகப் பெருங்கடல்'களாக ஊர்சுற்றித் திரிகிறார்கள்—ஒன்றையாவது இல்லையென்று மறுப்பார்களா.]

நன்றி

திராவிடர் திருநாளாம் பொங்கலன்று பொங்கல் வாழ்த்து அனுப்பி வைத்த கழகத் தோழர்களுக்கும், நண்பர்களுக்கும், விற்பனையாளர்களுக்கும் என் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அன்பன்,
தினகரன்.

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் இப்படிச் சந்தேகப்படுகிறார்கள்!

"சாஸ்திரியார் தம் கடமையைச் செய்து கண்டனத்தைத் தேடிக்கொண்டார்.

"திரு. அண்ணாதுரையோ தம் கடமையைச் செய்து புகழ் மாலை சூடிக்கொண்டார்."

"உறங்கும் புலியை உசுப்பிவிடுகிறார் போல் சாஸ்திரியார் இப்போது எதற்கு இந்தப் பேச்சைக் கிளப்புகிறார்? இப்படிக் கேட்கிறது '**குமுதம்**' பத்திரிகை.

தி. மு. கழகத்தின் நிலைமை, அதன் போக்கு, இயக்கத்தின் சக்தி யாவும் குமுதத்திற்குப் புரிந்திருக்கிறது. அதனால்தான், தடைச்சட்டம் கொண்டு வந்ததன் மூலம் சாஸ்திரியார் கண்டனத்துக்கு ஆளானார் - பொறுமை இழக்காமல் அறிக்கை விட்டதன் மூலம் அண்ணா புகழ்மாலை சூட்டிக்கொண்டார் என்று எழுதுகிறது.

உறங்கும் புலியைத் தடைச் சட்டம் மூலம் சாஸ்திரியார் ஏன் உசுப்புகிறார் என்று கேள்விக்குறியும் போடுகிறது **குமுதம்.**

தடைச்சட்டம் பற்றித் தன் கருத்தைக் கூறவந்த குமுத மங்கையும் - மற்ற ஏடுகளும் சாஸ்திரியாரின் அவசர முடிவைக் கண்டித்து, அரசினர்க்கு ஆலோசனை கூறும் வகையில் எழுதி, நேர்பாதையில் நடந்திருக்கும்பொழுது; ஆனந்தவிகடனார் மட்டும் ஆலோலம் பாடிக்கொண்டு குறுக்குச்சாலை வழி ஓடுவானேன்?

கொள்கையை விட்டுவிட்டு குழியிலே விழுந்துவிடும்படி போக்கிரித்தனமாக எழுதுவானேன்?

ஓகோ இதற்குப் பெயர்தான் தரகு வியாபாரமா?

குறுக்கெழுத்துப் போட்டி மூலம் சம்பாதித்த கொள்ளைப் பணத்தை ஆனந்த விகடன் அரசியல் தரகு மூலம் பெற முனைந்துள்ளான் போலும்!

இல்லையென்றால் - "கெட்டழிந்துவிட்டது கலைத்துவிடுங்கள்" என்று காந்தியாரே சொல்லிப்போன காங்கிரஸ் கட்சியில் இணைந்து விடுமாறு தி. மு. கழகத்துக்கு அழைப்புவிடுவானா?

எத்தனை துணிச்சல் விகடனுக்கு?

காங்கிரஸ் கட்சி ஓர் ஆலமரமாம். **அதன் கிளைகளில் எத்தனை பறவைகள் வேண்டுமானாலும் தங்கலாமாம்!**

காங்கிரஸ் கட்சி ஓர் ஆலமரம்தான். அதில் கோட்டான்களும், கூகைகளும், பாம்புகளும் குடியிருக்கமுடியுமே தவிர. (உச்சிக் கிளையில் சில நல்ல பறவைகளும் இருக்கலாம்.) அதன் நிழலில் ஜனநாயகமெனும் செடி ஒருக்காலும் தழைத்து வளர முடியாது. விகடன் இந்த உண்மையை விளங்கிக் கொள்வானாக!

விடுதலைக் கொள்கையைக் கைவிட்டு தி. மு. கழகம் காங்கிரசுடன் இணைந்து விட்டால் கங்கையும் காவேரியும் கலந்து விடுமாம். காசியும் காஞ்சியும் ஒன்றாகி விடுமாம்.

தி. மு. கழகத்தின் விடுதலைக் கொள்கை விடகன் கருத்துக்கு விரோதமாக இருந்தால், விடுதலைப் பிரச்சினை தேசிய ஒருமைப்பாட்டுக்குக் குந்தகம் விளைவிக்கும் என்று விகடன் கருதினால் கொள்கை அளவில் விவாதிக்க வேண்டுமே தவிர, தனி நாடாகப் பிரிந்தால் இன்னின்ன கேடுபாடுகள் ஏற்படும் என்று, முடியுமானால் எடுத்துச் சொல்ல வேண்டுமே தவிர, சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு தி. மு. கழகம் காங்கிரசில் சேர்ந்து விடுவதுதான் நல்லது. அதைத் தவிர வேறு வழியே இல்லை என்று முத்தாய்ப்பு வைத்து எழுதுவது விகடன் தரத்திற்கு வேண்டாத வேலை.

ஆங்கிலப் படம் ஒன்றில் - அந்நியன் ஒருவன் ஒரு நாட்டின் மீது படையெடுத்து அந்த நாட்டை அடிமைப்படுத்தி விடுகிறான். அடிமைப்பட்ட மக்கள் கொடுமை தாங்காமல் நாட்டை விட்டு வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள். பருவப் பெண் ஒருத்தி மூட்டை முடிச்சுகளுடன் நதிக்கரை ஓரமாக நடந்து கொண்டிருக்கிறாள். அடிமை கொண்ட தலைவனும் அவன் சிப்பாய்களும் அந்த வழியே வருகிறார்கள். சிப்பாய்களில் ஒருவன் பருவப் பெண்ணை நிறுத்தி, பாதி ரொட்டித் துண்டைக் காட்டி, இதற்கு உன் கற்பைத் தருவாயா என்று கேவலமாகக் கேட்கிறான்.

அவள் மூட்டையிலிருந்து ஒரு படத்தை எடுத்துக் காட்டி "இதோ எனக்கென்று ஒரு காதலன் இருக்கின்றான். அவன்தான் எனக்கு உயிர். நான் அவனைத் தேடித்தான் போய்க் கொண்டிருக்கிறேன். என்னை விட்டுவிடுங்கள் என்று கெஞ்சுகிறாள்.

சிப்பாய் சொல்லுகிறான். "அந்த உயிரோவியத்தை நதியிலே போடு! என் தலைவனுக்குக் காதலியாகிவிடு. உலாசமாக வாழலாம் வருகிறாயா?" என்று கண்ணைச் சிமிட்டுகிறான்.

அவள் சிப்பாயின் கன்னத்தில் ஓங்கி அறைந்துவிட்டு வேகமாக நடக்கிறாள்.

கதை கிடக்கட்டும்—

உன் காதலனை மறந்துவிட்டு என் தலைவனோடு வந்துவிடு என்று ஓர் பெண்ணின் மானத்தை ரொட்டித் துண்டுக்கு விலை பேசினானே சிப்பாய்; **அவனுக்கும் விகடனுக்கும்** வித்தியாசமிருப்பதாகவே நமக்குத் தெரியவில்லை.

விடுதலைக் கொள்கையோடு வாழ்ந்தது போதும், காங்கிரசிலே வந்து கலந்துவிடு என்பது, அந்தச் சிப்பாய் கேட்டதை விடக் கேவலமாக அல்லவா இருக்கிறது விகடனின் அழைப்பு!

"இனிப் பிரிவினைப் பேச்சையே நாங்கள் எடுக்கப் போவதில்லை என்ற முடிவுக்கு தி. மு. க. வந்துவிட வேண்டும்."

விகடன் விபரீத விளையாட்டில் இறங்கியிருக்கிறான். இல்லையென்றால் எழுதுவானா இப்படி?

மக்களின் பேராதரவைப் பெற்ற ஒரே கட்சி தி. மு. கழகம். எதையும் ஜனநாயக வழியில் சாதிக்கக் கூடிய சக்திவாய்ந்த எஃகுக் கோட்டை தி. மு. கழகம். லட்சக் கணக்கான உறுப்பினர்களையும்' பல்லாயிரக் கணக்கான கிளைக் கழகங்களையும் கொண்ட மாபெரும் இயக்கம் தி. மு. கழகம்,

பல ஊராட்சி மன்றங்களும், சென்னை மாநகராட்சி மன்றமும் அதன் பொறுப்பில். தமிழக சட்டமன்றத்தில் ஐம்பது உறுப்பினர்களைக் கொண்ட தனிம்பெரும் எதிர்க்கட்சி. தில்லிப் பாராளுமன்றத்தில் எண்மரையும், மாநில அவையில் அதன் தலைவரையும் மக்கள் ஆதரவுடன் ஜனநாயக வழியில் பெற்ற தனித்தன்மை வாய்ந்த கட்சி தி. மு. கழகம் இத்துணை சக்திவாய்ந்த இயக்கமென்று தெரிந்தும், வேறு எந்தக் கட்சிக்கும் கிடைக்காத வைர மணி ஆரமாம் அறிஞர் அண்ணா அவர்களின் தலைமையின்கீழ் இயங்கும் தி. மு. கழத்தைப் பார்த்து —

காங்கிரஸ்காரர்களே கழகத்தின் வளர்ச்சி கண்டு மருட்சியடைந்திருக்கும் இந்த நேரத்தில் கழகத்தைக் காங்கிரசோடு இணைத்துவிடும்படி விகடன் ஆலோசனை கூறியிருப்பது பைத்தியக்காரனையும் கைகொட்டிச் சிரிக்க வைத்து விட்டது.

வரவர விகடன் தரத்தைக் குறைத்துக் கொள்ளுகிறானா? இல்லை நிலத்தில் வாழும் பிராணியைப் போல் நிறத்தை மாற்றிக் கொள்ளுகிறானா?

தி. மு. கழகம் விடுதலைக் கொள்கையை எந்த மிரட்டலுக்காகவும் கைவிடாது. காங்கிரசுடன்......அப்படி ஒரு கற்பனைகூட விகடன் போன்ற கோமாளிகளுக்குத்தான் உதிக்க முடியும்.

கொள்கையை விட்டுவிட்டு வேறு கட்சியுடன் தி. மு. கழகம் இணையுமா என்ற கேள்வியே கழகத்தவருக்கு நஞ்சு போன்றதாகும்.

கங்கையும் காவிரியும் எந்தக் காலத்திலும் ஒன்றாக இணையாது இணைவதற்கு வழியே இல்லை.

காசி வேறுதான்! காஞ்சி வேறுதான்!

இவை ஒன்றாக இணையும் என்ற கெட்ட கனவை இனியேனும் விகடனார் விழிகள் சந்திக்காமல் இருக்கட்டும்.

—தினகரன்.

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

முடிதரித்தாண்ட பேரரசர்களின் பொழுது போக்காக இருந்த காட்சியை இன்று சரித்திரம் நமக்கு இதழ் விரித்துக் காட்டுகிறது.

முடியரசர்களின் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொள்ளும் தன்மை; இன்றைய குடியரசில் கொலுவீற்றிருப்போரின் உள்ளத்திலும் ஒளிந்துகொண்டிருக்கிறது என்பதைத்தான் - வர இருப்பதாக மிரட்டிக்கொண்டிருக்கிற தடைச்சட்டம் நமக்கு நினைப்பூட்டுகிறது.

இந்தியத் துணைக் கண்டத்தின் நெருக்கடி நிலைமையைப் பயன்படுத்திக்கொண்டு, தி. மு கழகத்தைத் தீயில் குளிப்பாட்டி சோதனை செய்வதுபோல் தடைச் சட்டமெனும் நெருப்பை ஊதி வளர்க்க ஊராள்வோர் முனைந்திருக்கிறார்கள்.

கடுமையான நடவடிக்கைக்கு இப்பொழுது இந்திய அரசியல் சட்டத்தில் இடமில்லையாகையால் - இந்திய அரசியல் சட்டத்தின் சில பகுதிகளைத் திருத்தி - உரிமைக்குரல் எழுப்புவோரின் குரல்வளையை நெறிக்க, ஜனநாயகத்துக்குப்புறம்பான வகையில் சட்டத்தைத் திருத்தி; தடைச் சட்டமெனும் பெரும் பூதத்தை நம்மீது ஏவி விடப்போகிறார்களாம்.

நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்? நாம் எதைச் செய்ய இருக்கிறோம்? அவர்கள் என்ன செய்யக் காத்திருக்கிறார்கள்?

இந்தக் கேள்வி நாட்டு மக்களிடத்தில் பரபரப்பை மட்டுமல்ல - கவலையையும் உண்டாக்கியிருக்கிறது.

இதைப் பற்றி ஆலோசிக்க அறிஞர் அண்ணா அவர்களும் - கழக முன்னோடிகளும் தில்லியில் கூட இருக்கிறார்கள்.

அவர்கள் முடிவெடுத்துச் சொல்லும் கருத்து வழிப்படிதான் நமது உணர்ச்சிகள் நடைபோடவேண்டும்.

திருவிடத்தின் விடுதலைக் கொள்கையை இதய பூர்வமாக ஏற்றுக்கொண்டுதான்; நாம் கழகத்தில் பணியாற்ற முன் வந்துள்ளோம்.

அதை நிறைவேற்றும் வகையில் எத்தனையோ இன்னல்களையும் - தழும்புகளையும் ஏற்றுக் கொண்டிருக்கிறோம்.

நாம் இங்கே பதவிகளையும், பங்களாவையும், பட்டு மெத்தைகளையும், பழரசங்களையும் எதிர்பார்த்து வந்தவர்களில்லை.

என்றைக்கோ ஒரு நாள் நாட்டு விடுதலைக்கு நம் உயிரை அர்ப்பணிக்கும் தூய இதயத்தோடு கழகத்தில் கலந்தோம்.

ஆகையால் தடைச் சட்டமென்ற இந்த மிரட்டல் நம்மைப் பலவீனர்களாக்கிவிடாது! அவர்கள் ஓடி வெகுநாளாகிவிட்டது.

நடப்பது நடக்கட்டும்! வருவது வரட்டும்!
விளைவது விளையட்டும்! நாம் அறவழி நடப்போம்!
அண்ணன் வழி செல்லுவோம்! அமைதி காப்போம்.